பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

ஸ்ரீ பியாரேலால்ஜீயால் நடத்தப்படும் காந்தியடிகளின் ஆங்கிலப் பத்திரிகையை அனுமதியுடன் தமிழாக்கியது.

15] சென்னை—ஞாயிறு, ஜூலை 21, 1946. [ விலை. அணா. 2

## புதிய மூடநம்பிக்கையா இது?

காந்தியடிகள் சமீபத்தில் புனா நகரத்தில் நடத்திய பிரார்த்தனைக் கூட்டமொன்றில் கூறியது :

“நான் என்ன ஒரு புதிய மூட நம்பிக்கையையா பரப்பி வருகிறேன்? கடவுள் என்றால் ஆள் அல்ல. அனைத்திலும் வியாபித்து நிற்கும் சர்வ வல்லமையுள்ளதோர் ஆவியே யாகும். அதைத் தம் இதயத்தில் ஏற்றுக் கொள்ளுகிறவர்கள் அதி அற்புதமானதோர் ஆற்றல் உண்டாவதைக் காண்பார்கள். அந்த சக்தியும் நீராவி, மின்சாரம் போன்ற பௌதிக சக்திகளைப் போலவே பலன் அளிக்கும். ஆனால் அது பௌதிக சக்திகளை விட வெகு சூட்சமமானதாகும். ராமநாமம் என்பது வெறும் கண்கட்டி வித்தையன்று. அதன் உட் பொருளை அறிந்து கொள்ள வேண்டும். அப்பொழுதே அது நல்ல பலனைத் தரும். விஞ்ஞானிகள் இடைவிடாது ஆராய்ச்சியும் சோதனையும் செய்ததன் பலனாக தாம் கண்ட உண்மைகள் எல்லாவற்றையும் சேர்த்து ஒரு சிறு விதியை வகுத்துக் கொள்வார்கள். அது போன்றதே நான் கூறும் இராம நாமமும். வாயால் மட்டும் இராமநாமத்தைப் பஜிப்பதால் எவ்வித சக்தியும் கிடைக்கமாட்டாது. இராமநாமத்தால் சக்திபெற வேண்டுமானால் அதைப் பாராயணம் செய்வதற்கான நிபந்தனைகளையெல்லாம் அறிந்து கொண்டு அவற்றின்படி நடந்து வர வேண்டியது அவசியமாகும். கடவுள் நாமத்தைப் பஜிக்க விரும்புகிறவர்கள் கடவுள் வகுக்கும் முறைப்படி வாழ வேண்டியது இன்றியமையாததாகும்.”

## ஹரிஜனச் சேரியும், சத்தியாக்ரஹமும்

காந்தியடிகள் சமீபத்தில் பம்பாயில் ஹரிஜனச் சேரியில் தங்கியிருந்த சமயத்தில் தம்முடைய முகாமை மேற்பார்த்து வந்தவர்கள் தம்மிடம் காட்டிய அன்பைக் கண்டு திகைத்துப் போனார். அவர்கள் அதிகமாக கவனித்துவந்த போதிலும் அந்த முகாமில் தங்கியிருப்பது அவருக்கு அதிகச் சிரமமாகவே இருந்தது. அசுத்தமும் ஆபாசமும் அவ்வளவு அதிகம். அங்குள்ள கக்கூசுகள் அசங்கியமாயிருப்பதால் அவற்றை உபயோகிக்கக்கூடாது என்றும் அங்கே ஈக்கள் மொய்த்துக் கொண்டிருப்பதால் அவற்றை உபயோகிப்பதால் நோய் உண்டாகக் கூடும் என்றும் டாக்டர் தின்ஷா காந்தியடிகளிடம் கூறினார்.

அதற்கு காந்தியடிகள் கூறியது :—

“அதைப்பற்றி நான் கவலைப்படவேயில்லை. இரண்டு டாக்டர்கள் என்னைக் கவனித்துவந்த போதிலும் நான் கடவுளைத் தவிர வேறு யாரையும் நம்பியிருக்கவில்லை. சர்வ வல்லமையுள்ள கடவுள் என்னுடைய தேகசுகத்தைக் கவனித்துக்கொள்வார். அத்தகைய நம்பிக்கை என்னுடன் யிருப்பவர்களுக்கு இல்லை. அவர்களைப் பற்றித்தான் நான் கவலை கொள்கிறேன். எனக்கு நல்ல சுத்தமான கக்கூசு ஏற்படுத்தியிருக்கிறீர்கள். ஆனால் என்னுடன் இருப்பவர்கள் என்ன செய்வார்கள்? இனிமேல் இங்கு வந்தால் நான் மட்டும் தனியாகத் தங்கியிருக்கவே விரும்புகின்றேன். நான் தங்கியிருக்கும் வீடு ஓவர்ஸீயருடையதாமே. அப்படியானால் அவரும் சுகாதாரத்துக்குப் பொறுப்பாளிகளான முனிசிபல் சபையாரும் மராமத்து இலாக்காதாரும் எப்படித்தான் இவ்வளவு ஆபாசத்தையும் பார்த்துக் கொண்டிருக்கிறார்களோ எனக்கு ஆச்சரியமா யிருக்கிறது. என்னுடைய வரவால் இந்த இடம் சுத்தமாக ஆகாவிட்டால் நான் இங்கு வந்து தங்குவது எதற்காக?”

இந்தவிதமாகக் கூறிவிட்டு காந்தியடிகள் ஹரிஜனச் சேரிகளைப் பார்வையிட்டு அறிக்கை தயாரிக்குமாறு டாக்டர் சுசீலா நய்யாரையும்டாக்டர் தின்ஷா மேத்தாவையும் நியமித்தார். அவர்கள் கண்ட அசுத்தமும் ஆபாசமும் சகிக்கமுடியாத அளவு அதிகமாயிருந்தன. அநேக இடங்களில் சாக்கடைக் குழாய்கள் அடைப்பட்டுக் கிடந்தன; ஜலம் போகவில்லை. சில யிடங்களில் மாடியிலுள்ள சாக்கடைக் குழாய்களில் துவாரங்கள் ஏற்பட்டிருப்பதால் கீழே உள்ளவர்கள் மீது சாக்கடை ஜலம் ஒழுகுகிறது. குடிக்கப் போதுமான ஜலம் கிடையாது. இரண்டு மூன்று மணி நேரம்தான் குழாயில் ஜலம் வருகின்றது. நீர்க்கக்கூசுகள் வேலை செய்யவில்லை. அதனால் கக்கூசுகள் வாய்விட்டுச் சொல்ல முடியாத அளவு ஆபாசமா யிருந்ததில் ஆச்சரியமில்லை.

இதை எல்லாம் கேட்டதும் காந்தியடிகள் கூறியது:-

“இந்த நிலைமையிலுள்ள கக்கூசுக்குள் எப்படித்தான் போகிறார்களோ எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இவைகள் மட்டுமா நாற்றம், குப்பைத் தொட்டிகளும் நாற்றம்தான். அவைகளை மூடக்கூட இல்லை.”

அதன்பின் அவர் பம்பாயில் நடத்திய கடைசிப் பிரார்த்தனைக் கூட்டத்தில் கூறியது :—

“இந்தச் சேரிகளைச் சுத்தமாக வைக்க வேண்டியது முனிஸிபல் அதிகாரிகளுடைய கடமையாகும். அவர்கள் அந்தக் கடமையை நிறைவேற்றத் தவறினால் சத்யாக்கிரகம் செய்தேனும் அவற்றைச் சீர்செய்யுமாறு கேட்க ஜனங்களுக்கு உரிமை உண்டு. இந்தச் சீர்கேடான நிலைமையை மாற்றியமைக்க சேரிகளின் சொந்தக்காரர்களும் மேற்பார்வையாளர்களும் தங்களாலானதை யெல்லாம் செய்ய வேண்டியது அவசியமாகும்.

என்னுடைய ஜாகையைப் பாதுகாப்பதற்காக இரவும் பகலும் போலீஸ்காரர் பாராக் கொடுப்பதைக் காண எனக்கு வெட்கமாகவும் வருத்தமாகவும் இருக்கிறது. நீங்களும் வெட்கப்பட வேண்டிய விஷயமேயாகும். நீங்கள் போலீசாரிடம் “அவர் எங்கள் பாதுகாப்பில் இருக்கிறார், அவரை நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்” என்று சொல்லிவிட

வேண்டும். ஹரிஜனங்களுக்கு ஜாதி ஹிந்துக்களிடம் கோபம் உண்டாகக் காரணமுண்டு. நான் பங்கி (தோட்டி) ஆகிவிட்டபோதிலும் என்னையும் ஜாதி ஹிந்துவாக பாவித்து என்னிடமும் கோபம்கொள்ள உரிமை உண்டு. அப்படி அவர்கள் கோபம்கொண்டு அதை என்னிடம் காட்டினால் அதற்காக நான் வருத்தம்கொள்ள மாட்டேன். நான் ஜாதி ஹிந்துக்களுக்கும் ஹரிஜனங்களுக்கும் தத்தம் கடமைகளை உணர்த்த என்னாலியன்றவரை முயன்று வருகின்றேன். நான் எவ்வளவோ முயன்றும் இந்தத் தீண்டாமை யிருந்து கொண்டேதான் இருக்கிறது. அதனால் ஹரிஜனங்கள் என்னிடம் கோபங்கொள்ள நியாயமுண்டு.

இறுதியில் நான் உங்களுக்கு ஞாபகமூட்டுவது யாதெனில், நான் அடுத்த தடவை இங்கே வரும்போது என்னுடைய அறையில் மட்டுமின்றி எல்லா யிடங்களிலும் சுத்தம் காணப்பட வேண்டும் என்பதேயாகும். அத்துடன் போலீஸ் பாதுகாவலும் இருக்கக் கூடாது. நான் சேரியிலுள்ளவர்களுக்குப் பாரமாக இருக்கவும் விரும்பவில்லை."

புனா, பியாரேலால்.

## மதுபானத் தீமை

"ஒரு கிளாஸ் மது பருகினாலும் உற்சாகம் உண்டாகிறது, முகம் பிரகாசிக்கிறது, அப்போது அவன் மயில் போல்வான்.

மதுவானது தலைக்கு ஏறியதும் ஆனந்தக் கூத்தாடுகிறான். அப்போது அவன் குரங்கு போல்வான்.

அதன் பின் அவனைக் குடிவெறி ஆட்கொண்டு விடுகிறது. அவன் கோபாவேசமுள்ள சிம்மம் போல் ஆய்விடுகிறான்.

அந்த வெறி உச்சஸ்தானம் அடையும்போது பன்றி ஆகித் தரையில் விழுந்து புரண்டு இறுதியில் காலும் கையும் நீட்டி உறங்கி விடுகின்றான்."

குடிவெறி மயக்கம் படிப் படியாக அதிகரிப்பதைப் பழைய மகமதிய நூல்கள் கூறும் விபரமே இது. குடிப் பழக்கம் மேனாடுகளில் வளர்ந்து கொண்டு வருகிறது. மேனாட்டாருடைய கேடான வழக்கங்களில் பலவற்றை நாம் பின்பற்றி வருகிறோம். நம்முடைய பண்பாட்டுக்குப் புறம்பான இந்தத் தீய வழக்கத்தை நாம் கைக்கொள்ள லாகாது.

பம்பாய், — 7-7-46 — ஏ. கே.

## ஒரு அசங்கியமான வழக்கம்

ஒரு சகோதரி எழுதுகிறார் :—

"கண்ட யிடங்களில் துப்புவதால் உண்டாகும் அபாயங்களை அறிந்து கொள்ளும்படி நான் ஜனங்களுக்கு சில வருஷங்களாக உதவி செய்ய முயன்று வருகின்றேன். கண்ட யிடங்களிலெல்லாம் துப்புவதாலும், மூக்குச் சிந்துவதாலும் ஏற்படும் அழுக்கும் ஆபாசமும் இவ்வளவு என்று சொல்ல முடியாதிருப்பதால் யாரிடம் எதைச் சொல்வது என்றுகூடத் தெரியவில்லை. எழுத்து வாசனையில்லாதவர்களும் சிறுவர் சிறுமிகளும்தான் இப்படிச் செய்கிறார்கள் என்பதில்லை. கல்வி கற்ற ஆண்களும் பெண்களுங்கூட ரயில்வே நிலையங்களிலும், டிராம்களிலும் வண்டிகளிலும் கடைகளிலும் முற்றங்களிலும் பிறயிடங்களிலும் எச்சில் துப்புகிறார்கள். நம்முடைய நாடு நாளுக்கு நாள் அதிகமாக அசுத்தமாகிக்கொண்டு வருகிறது. நோய்கள் நாலா பக்கங்களிலும் பரவி வருகின்றன. சுத்தமாயிருக்க வேண்டும் என்னும் செய்தியைப் பரப்புவதற்காகத் தொண்டர்கள் முன்வர மாட்டார்களா ?"

கண்ட யிடங்களிலெல்லாம் துப்புவது என்பது கெட்ட பழக்கம். அதைப்பற்றி போதுமான அளவு நான் இதற்கு முன்னதாக எழுதியுள்ளேன். நம்முடைய நாட்டில் சுத்தத்தைப் பற்றியும் சுகாதாரத்தைப் பற்றியும் சகல வகுப்பாரிடையும் காணப்படும் அறியாமையே இதற்குக் காரணம். நோய் வராமல் காத்துக்கொள்ள வேண்டுமானால் இந்த வழக்கத்தை நாம் விட்டாகவேண்டும். நிருபருடைய யோசனை நிச்சயமாக சிபார்சு செய்யத் தகுந்ததேயாகும்.

பாஞ்சகனி -- 14-7-46 — மோ. க. காந்தி.

## கேள்வியும் பதிலும்

கேள்வி :—பிரார்த்தனைக் கூட்டங்களுக்கு வரும் ஆயிரக்கணக்கான மக்கள் பிரார்த்தனைச் சமயத்தில் எந்த விஷயத்திலேனும் மனத்தை நிலை நாட்டுவது என்பது சாத்தியமான காரியமா ?

பதில் :—ஆம் என்றே பதில் கூறுவேன். பலர் கூடிப் பிரார்த்தனை செய்யமுடியும் என்ற நம்பிக்கை யுடையவனா யிருப்பதால்தான் இத்தகைய பிரார்த்தனைக் கூட்டங்களை நடத்தி வருகின்றேன். என்னுடைய அனுபவம் என்னுடைய நம்பிக்கைக்கு அரண் செய்கின்றது. அத்தகைய பிரார்த்தனை பயனுடையதாக இருப்பது அதை நடத்துபவருடைய தூய்மையையும் அதில் கலந்து கொள்பவருடைய நம்பிக்கையுமே பொறுத்திருக்கின்றது. கலந்து கொள்பவருக்கு நம்பிக்கை யிருந்தும் நடத்துபவர் ஆஷாடபூதியா யிருக்கக்கூடும். ஆனால் பொய்யாகிய இருளிலும் கூட மெய்யாகிய சூரியன் பிரகாசிக்கவே செய்யும். நான் நடத்தும் பிரார்த்தனைகள் பயனுடையவை தானா என்பது என் மரணத்துக்குப் பிறகே தெரியக் கூடும்.

இது சம்பந்தமாக ஒரு வாயாடி மூன்று கேள்விகள் கேட்கிறார். பதில் சொல்லவேண்டிய கேள்வி இது:-

"அரசியல் கல்விதானே மதக்கல்வியை விடப் பல்லாயிர மடங்கு உயர்ந்தது ?"

மதம் என்பதைப் பலவிதமான மதக் கோட்பாடுகளுக்குள் அடக்காதிருந்தால் மதபோதனையை அஸ்திவாரமாகக் கொள்ளாத எந்த அரசியல் கல்வியும் எள்ளளவு பயனும் தரமாட்டாது. மதமில்லாத மனிதர் வேரில்லாத மரமே ஆவர். ஆதலால் வாழ்வு உண்மையானதாக இருக்கவேண்டுமானால் அதை மதமாகிய அஸ்திவாரத்தின் பேரிலேயே அமைக்க வேண்டியது இன்றியமையாத தாகும்.

## திருட்டு

கேள்வி :—வேலைக்காரன் திருட்டுக் குணமுடையவனாகவும் நயத்தாலும் பயத்தாலும் திருத்த முடியாதவனாகவும் இருந்தால் எஜமானன் செய்யக் கூடியது யாது ?

பதில் :—இப்படித் திருட்டுக் குணமுடையவர்கள் எத்தனையோ பேர் உளர். அவர்கள் கண்டு பிடிக்கப்படவில்லை என்பதுதான் வித்தியாசம். நன்றாக யோசித்துப் பார்த்தால் நாம் எல்லோருமே திருடர்கள் தாம். ஆனால் நாம் நம்மிடம் தாட்சண்யமாகவும் கண்டு பிடிக்கப்படுகிறவர்களிடமும் அசாதாரணமான முறையில் திருடுகிறவர்களிடமும் தாட்சண்யமில்லாமலும் நடந்துகொள்கிறோம். தாம் விற்கும் பொருளுக்கு எவ்வளவு அதிகமான விலை கூற முடியுமோ அவ்வளவு அதிகமான விலையைச் சற்றும் சங்கோஜமில்லாமல் கூறுபவரைத் திருடர் என்று கூறாமல் வேறு என்ன கூறுவது ? ஏமாற்றுவது வாங்குகிறவர்க்குத் தெரிந்துதானே நடக்கிறது என்று கூறக்கூடும். அப்படியானால் ஏமாற்று நடக்கிறது என்பதில் ஆட்சேபனை யில்லை அல்லவா ? வாங்குகிறவர் ஏமாற்றுவதை அறிந்து கொண்டேதான் வாங்குகிறார் என்பது உண்மைதான். ஆனால் அவர்க்கு வேறு வழியில்லை. அதனால்தான் வாங்குகிறாரேயன்றி அப்படி ஏமாற்றுவதைச் சரி என்று ஒப்புக் கொண்டு வாங்கவில்லை. இந்தவிதமான

திருட்டு சமூகத்தினிடம் ஆழமாக வேரூன்றியுள்ள நோய் ஒன்றின் புறத்தோற்றங்களில் ஒன்றேயாகும். அது பணமுடைய சிலர்க்கும் பார்ப்பர்கள் பலர்க்கும் இடையில் சதா காலமும் நடைபெற்று வரும் போராட்டத்தையே காட்டுகின்றது. ஆதலால் எஜமானர்க்கு நான் கூறும் யோசனை யாதெனில் திருடும்படியான சந்தர்ப்பங்கள் அளியாமல இருக்க வேண்டும் என்பதும், வேலைக்காரனையும் தம்முடைய சகோதரனைப் போல நடத்த வேண்டும் என்பதும், எந்த அன்பான முறையிலும் திருத்த முடியாது போனால் அவனை வேலையை விட்டு நீக்கிவிட வேண்டும் என்பதுமே யாகும். என் தம்பியா யிருந்தால் இப்படி நடத்துவேனா என்று கேட்டுக் கொண்டே தான் எஜமானர் வேலைக்காரனை நடத்த வேண்டும்.

பாஞ்சகனி — 14-7-46 — மோ. க. காந்தி.

## கஸ்தூரிபா ஞாபகார்த்த நிதி

இந்த நிதியை எவ்வளவு அவசரமாக வசூலித்தார்களோ அவ்வளவு அவசரமாக அதைச் செலவு செய்யவில்லை என்றும் பொது ஜனங்களுக்குஅது விஷயமாய் எதுவும் சொல்ல வில்லை என்றும் சிலர் கூறுகிறார்கள். இந்த இரண்டு கூற்றுக்களுக்கும் ஆதாரம் கிடையாது. நிதியில் பெரும்பாகம் பட்டணங்களிலேயே வசூலிக்கப்பட்ட போதிலும் கிராமத்திலுள்ள பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் செலவு செய்வதற்காகவே வசூலிக்கப் பட்டது என்பது உண்மையாகும். நிதியின் கணக்குகளைப் பார்வை யிடாதவர்களுக்கு அந்த நிதி எப்படிச் செலவு செய்யப்படுகிறது என்பது தெரிய முடியாது. குறைகூறுகிறவர்கள் எல்லோரும்பட்டணவாசிகளேயாவர். கிராமவாசிகள் பத்திரிகைகள் படிப்பதுமில்லை, பணம் செலவாகும் விதத்தை அறியக் கவலைப்படுவதுமில்லை. எந்த கிராமங்களில் வேலை நடக்கின்றதோ அந்த கிராமத்து ஜனங்கள் நடப்பதை எல்லாம் நேராகவே பார்த்துக் கொள்கிறார்கள்.

பட்டணவாசிகளுக்காகச் செய்யப்படும் வேலைகள் எல்லாம் உடனுக்குடன் உலகமெங்கும் பரப்பப் பட்டு விடுகின்றன. கட்டடம் கட்டவேண்டுமா, சிலை நாட்டவேண்டுமா, உடனே பத்திரிகைகளில் விளம்பரம் செய்துவிடுகிறார்கள். கட்டடத்துக்கு அஸ்திவாரக்கல் நாட்டுவிழாவும் சிலையின் திறப்பு விழாவும் வெகு விமரிசையாக நடத்தப்படுகின்றன. அத்தகைய பிரசாரம் எதுவும் கிராமத்துப் பெண்களிடையே செய்யப்படும் வேலையைக் குறித்து நடத்த முடியாது. ஆதலால் யார் மூலமாக கஸ்தூரிபா நிதி வேலை நடந்துவருகிறது என்பதை அறிவதோடு வாசகர்கள் இப்பொழுது திருப்தி அடையவேண்டும். நாட்டிலுள்ள 7 லட்சம் கிராமங்களில் ஆயிரம் கிராமங்களிலாவது வேலை நடக்க ஆரம்பித்து அங்குள்ள பெண்களும் குழந்தைகளும் அதில் சரியாகக் கலந்து கொள்ளும் காலத்தில்தான் நடக்கும் வேலை எல்லோர்க்கும் தானாகவே தெரிந்துவிடும். கிராமங்களில் வேலை செய்வதற்காக மருத்துவச்சிகளும் நர்ஸுகளும் பயிற்சி செய்விக்கப்படுகிறார்கள் என்பதை மட்டும் எல்லோரும் இன்று அறிந்துகொண்டால் போதுமானது.

இந்த நிதியைப் பரிபாலிக்கும் நிர்வாக சபை சமீபத்தில் புனாவில் கூடியபொழுது நாட்டிலுள்ள 21 மாகாணங்களில் பலவற்றில் பயிற்சி முகாம்கள் ஏற்படுத்துவதற்காக பணம் செலவு செய்வதென்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இந்த முகாம்களில் பயிற்சி பெறுவோர் அனைவரும் கிராமங்களுக்கே செல்வார்களாதலால் அவர்களைப் பற்றிப் பட்டணங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தினாலன்றி அவர்களைப் பற்றிப் பட்டணவாசிகள் யாதொன்றும் அறிய முடியாது. அந்தமாதிரிக் காரியங்கள் நடத்துவது சரியுமில்லை, நடத்துவதற்குக் காரியக் கமிட்டியார் உத்தேசிக்கவுமில்லை. ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டிய மற்றொரு விஷயம் யாதெனில் செய்ய ஏற்றுக்கொண்ட வேலை புதிதாகையால் புதிய முறைகளிலேயே செய்ய வேண்டியதா யிருக்கிறது. ஆதலால் கதர் போன்ற கிராமக் கைத்தொழில்கள் எப்படி மெதுவாக நடந்து வந்தனவோ எப்படி இப்பொழுதும் மெதுவாக நடந்து வருகின்றனவோ அப்படியே தான் இந்த வேலையும் நடந்துவரும். கிராமங்களைப் பற்றி இதுவரை யாரும் கவனிக்கவே யில்லை. இப்பொழுதும்கூட யாரும் கவனிக்கக் காணோம். பட்டண வாசிகள் கிராமங்களைப் பற்றிக் கவனிக்க ஆரம்பித்தால்தான் ஏதேனும் உண்மையான மாறுதல்கள் ஏற்பட ஏதுவாகும். அந்த நாள்வரை பத்திரிகைகளும் நகரவாசிகளும் கிராம ஸ்தாபனங்கள் விஷயத்தில் அக்கரை கொள்ளப் போவதில்லை.

சில வேளைகளில் குறிப்பிட்ட ஒரு விஷயத்துக்கு வசூலிக்கப்படும் பணம் உடனேயே செலவு செய்யப் படடு விடுகின்றது. அப்படிச் செய்வது முற்றிலும் சரியே. ஆனால் கஸ்தூரிபா நிதி விஷயத்தில் வெகு ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டியதா யிருக்கிறது. நிதிக்குப் பணம் கொடுத்தவர்கள் ஆயிரக் கணக்கானவர்களாக இருந்தபோதிலும் அவர்கள் கொடுத்த பணம் 1900 மைல் தூரத்துக்கு அப்பாலும் 40 கோடி மக்களுக்கும் செலவு செய்யப்பட வேண்டியதாக இருக்கிறது. அதனால் வேலையை எப்படிச் செய்வது, எங்கே ஆரம்பிப்பது என்னும் விஷயங்கள் யோசித்துச் சாவதானமாய் செய்ய வேண்டியவைகளாகும். இந்த வேலைக்குத் தக்க ஊழியர்கள் உடனேயே அகப்பட மாட்டார்கள். அத்துடன் அவர்களைப் பயிற்றுவிக்கவும் நாளாகும். ஆதலால் நிதியின் தர்மகர்த்தர்கள் பணத்தை வீணாக்கவோ அவசியமான இடங்களில் செலவு செய்யச் சோம்பவோ மாட்டார்கள் என்பதைப் பணம் வழங்கியவர்கள் பரிபூரணமாக நம்பலாம்.

நிதியை நடத்துவதற்காகப் பல இடங்களில் கமிட்டிகள் ஏற்படுத்தப்பட்ட நாள் முதல் இந்தக் கமிட்டிகளைப் பணம் தந்தவர்களைக் கொண்டே அமைக்க வேண்டும் என்றும் அதற்குப் பதிலாக அவர்களில் வெகு சிலரே சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள் என்றும் குறை கூறப்பட்டு வருகிறது. பணத்தை எப்படிச் செலவு செய்வது என்பது பற்றிப் பணம் கொடுத்தவர்களுக்கே நன்றாகத் தெரியும் என்று சொல்ல முடியாது. உதாரணமாக அநேகர் ஒரு ஏரியை உண்டாக்குவதற்காக 10 கோடி ரூபாய் நன்கொடை அளிக்கலாம். ஆனால் எஞ்சினியர்கள் அல்லவோ அந்தப் பணத்தைச் செலவு செய்ய வேண்டியவர்கள்? அந்த எஞ்சினியர்களுடைய உதவி யில்லாமல் பணம் கொடுத்தவர்கள் என்ன செய்ய இயலும்? இந்த மாதிரிப் பல உதாரணங்கள் கூற முடியும். ஆரம்பத்தில் மேற்கூறியபடிதான் கமிட்டிகள் அமைக்கப்பட்டன. ஆனால் நிதியின் நோக்கம் பெண்களுக்குச் சேவை செய்வதாதலால் இயன்ற மட்டும் பெண்களைக் கொண்டே வேலை செய்ய வேண்டும் என்று பிற்பாடு எண்ணப்பட்டது. ஆதலால் ஸ்தாபனம் முழுவதையும் பெண்களிடமே ஒப்புவிக்க எண்ணுவதால் அவர்களுக்குத் தேவையான நம்பிக்கையை ஊட்ட முயன்று வருகிறார்கள். இதெல்லாம் உடனே நடந்து விடக்கூடிய காரியமன்று. சமாளிக்கவேண்டிய கஷ்டங்களும் பல. ஆயினும் வேலையானது நாளுக்கு நாள் அதிகமாக வளர்ந்து வரும் என்றும் அந்தப் பாரத்தை ஏற்கப் பெண்கள் தயாராய் விடுவார்கள் என்றும் நம்புகிறோம். அப்படிச் செய்வது பலன் தருமா என்பது பின்னால்தான் தெரியும்.

பாஞ்சகனி. — 14-7-46 — மோ. க. காந்தி.

[ஹரிஜன சேவக்கிலிருந்து]

தமிழ் ஹரிஜன்

ஜூலை 21 ஞாயிறு 1946

## யூதர்களும் பாலஸ்தீனமும்

யூதர்-அராபியர் விஷயத்தைப் பற்றி நான் இதுவரை யாதொன்றும் கூறவில்லை. சரியான காரணங்களால் தான் அப்படி கூறவில்லை. அதைக் கொண்டு எனக்கு அந்த விஷயத்தில் அக்கரையில்லை என்று எண்ண வேண்டாம். ஆயினும் அந்த விஷயத்தைப் பற்றி சரியான முறையில் எழுதுவதற்குப் போதிய ஞானம் எனக்கு இல்லை என்பதே நான் எழுதாததற்குக் காரணம். அதே காரணத்தால்தான் நான் அநேக உலக விஷயங்களைப் பற்றி எழுதாமலிருந்து வருகிறேன். அந்த விஷயங்களைப் பற்றி எழுதாமலிருந்துங்கூட எனக்கு அளவுக்கு மிஞ்சிய வேலை இருந்து வருகிறது. ஆயினும் ஒரு பத்திரிகையில் காணப்பட்ட நான்கு வரிகள் என்னை வெளியே இழுத்துவிடுவதாய் இருக்கின்றன. அவைகளைக் கண்டதும் நண்பர் ஒருவர் அதைக் கத்திரித்து எனக்கு அனுப்பியிருக்கின்றார். அவர் அனுப்பாவிட்டால் அதைப்பற்றி நான் அறிந்திருக்கவே மாட்டேன். இந்த விஷயத்தைப் பற்றி இதுமாதிரி ஏதோ திரு. லூயி பிஷருடன் பேசிக்கொண்டிருந்தபொழுது சொன்னேன் என்பது உண்மைதான். யூதர்கள் கொடுமையாக நடத்தப் படுகிறார்கள் என்பதை நான் நம்பவே செய்கின்றேன். ஐரோப்பிய யூதர்கள் வசிக்கும் இடங்களை "கெட்டா" என்று கூறுவதாக அறிகின்றேன். அவர்கள் இரக்கமின்றித் துன்புறுத்தப் படுவதால்தான் பாலஸ்தீனத்துக்குத் திரும்பிப் போகும் பிரச்னை எழுந்துள்ளது என்று நம்புகிறேன். அவர்கள் உலகத்துக்குச் செய்துள்ள சேவையின் காரணத்துக்காகவேனும் உலகத்தில் எந்தயிடத்திலும் குடியிருக்க அவர்கள் உரிமையுடையவர்கள் ஆவார்கள்.

ஆயினும் அவர்கள் முன்னால் அமெரிக்காவின் உதவியைக் கொண்டும் பிரிட்டனின் உதவியைக் கொண்டும் இப்பொழுது வெறும் பயங்கர இயக்கங்களின் உதவியைக் கொண்டும் பாலஸ்தீனத்தில் போய் பலாத்காரமாகக் குடியேற முயல்வது தவறு என்றே எண்ணுகின்றேன். அவர்கள் உலகப் பிரஜைகளாயிருப்பதால் எந்த நாடும் அவர்களைக் கௌரவம் பொருந்திய விருந்தாளிகளாக ஏற்றுக் கொள்வார்கள். அவர்களுடைய சிக்கனக் குணமும் பலதிறப்பட்ட சாமார்த்தியமும் அபாரமான சுறுசுறுப்பும் எந்தயிடம் போனாலும் சந்தோஷமாக வரவேற்கச் செய்யும் என்பதில் சந்தேகமில்லை. கிறிஸ்தவர்கள் தங்கள் வேதத்திலுள்ள புதிய ஏற்பாட்டைத் தவறாக வியாக்கியானம் செய்து அதன் காரணமாக யூதர்களிடம் ஆதாரமற்ற வெறுப்புக் கொண்டிருப்பது கிறிஸ்தவர்களுடைய பெயர்க்கே இழிவு தேடுவதாகும். யூதர்களில எவரேனும் தவறு செய்தால் யூதசமூகம் முழுவதும் குற்றம் சாட்டப்படுகின்றது. ஆனால் யூதர்களில் எவரேனும் எயின்ஸ்டீனைப் போல ஏதேனும் ஒரு பெரிய விஷயத்தைக் கண்டுபிடித்தாலும் அல்லது இணையற்ற சாஹித்தியம் ஏதேனும் இயற்றினாலும் கண்டுபிடித்தவரையும் இயற்றியவரையும் கொண்டாடுகிறோமேயன்றி அவர்களுடைய சமூகத்தாரைக் கொண்டாடுவதில்லை.

யூதர்கள் உள்ள துக்ககரமான நிலையைக் கண்டு என்னுடைய இருதயம் முழுவதும் அவர்களுக்காக வருந்துவதில் ஆச்சரியமொன்றுமில்லை. அவர்களுக்குக் கஷ்டங்கள் அதிகமாக ஏற்பட்டு விட்டதால் அவர்கள் அதிலிருந்து சமாதான வழியைக் கற்றுக்கொண்டிருப்பார்கள் என்று நாம் நினைக்கக் கூடும். அவர்களை விரும்பாத தேசத்தில் போய் பலாத்காரமாகக் குடியேறுவதற்கு அவர்கள் ஏன் அமரிக்கப் பணத்தையும் பிரிட்டிஷ் ஆயுத பலத்தையும் நம்பியிருக்க வேண்டும்? அப்படி அவர்கள் பாலஸ்தீனத்தில் பலாத்காரமாகப் போய்க் குடியேறுவதற்காக ஏன் அவர்கள் பயங்கர இயக்கம் நடத்த வேண்டும்? அவர்களுடைய சிறந்த தீர்க்கதரிசிகளும் சந்தோஷமாக முள் முடியைத் தரித்த யூதராகிய இயேசுவும் கஷ்டத்தில் மூழ்கித் தவிக்கும் உலகத்துக்கு அருளிச் செய்த இணையற்ற அஹிம்சா ஆயுதத்தை அவர்கள் ஏற்றுக் கொள்வார்களானால் அவர்கள் பக்கம் உலகம் முழுவதுமே திரண்டு எழுந்து விடும். அத்துடன் யூதர்கள் உலகத்துக்குச் செய்துள்ள சேவைகளில் இதுவே தலைமை ஸ்தானம் பெறும் என்பதில் சந்தேகமில்லை. அதனால் இரண்டு விதமான நன்மைகள் உண்டாகும். அவர்களுக்கும் ஆநந்தம் உண்டாகும். கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் உலகத்துக்கும் ஆறுதலளிக்கும் அஞ்சனமாகும்.

பஞ்சகனி — 14-7-46 — மோ. க. காந்தி

குறிப்பு:—மேலே குறிப்பிட்ட நான்கு வரிகள் வருமாறு:—

"காந்தி பாலஸ்தீனப் பிரச்னையையும் விவாதித்தார். யூதர்களுடைய கோரிக்கை நியாயமானதே என்று கூறினார். ஆயினும் அராபியர்களுக்குக் கேடு உண்டாக்கக் கூடாது என்று அபிப்பிராயப்பட்டார்."

## பட்டணங்களில் கதர்

"கிராமங்களுடைய தேவைகள் கிராமங்களிலேயே பூர்த்தி செய்யப்படுவதற்காகத் தாங்கள் வகுத்துள்ள திட்டத்தில் பட்டணவாசிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கதர்க் கடைகளை மூடிவிடலாம் என்றும் பட்டணவாசிகள் பழையபடி மில்துணியை உபயோகிக்க ஆரம்பிக்கலாம் என்றும் கூறக்கூட வந்து விட்டீர்கள்.

தங்கள் புதுத் தத்துவத்தைப்பற்றியும் அதன் காரணமாகக் கதர்க் கடைகளை நடத்துவதில் மாற்றங்கள் செய்வதைப்பற்றியும் கதர் வாங்குவதற்கு நூல் கொடுக்க வேண்டும் என்று ஏற்படுத்தியிருப்பது பற்றியும் ஆட்சேபம் கூறுவதற்கில்லை. ஆயினும் கதரே கட்டவேண்டும் என்று எண்ணும் பட்டணவாசிகளுடைய கஷ்டத்தைத் தீர்த்து வைக்கும்படியாகத் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்."

கதர்த் திட்டம் என்று சொல்லப்படுகிற திட்டத்தை வாசகர்கள் நன்றாக அறிந்துகொள்ள வேண்டும். புதுத் திட்டம் என்று சொல்லப்படுகிறதே அது புதுத் திட்டமா? இல்லை. கிராமவாசிகள் கதரை அணியச் செய்ய வேண்டுமானால் இந்த மாதிரித் திட்டம் செய்ய வேண்டும் என்று கதர் இயக்கத்தின் ஆரம்பத்திலேயே கருதப்பட்டது. அதனால் இப்பொழுது கூறப்படும் புதுத் திட்டம் இதுவரை நடந்து வந்த திட்டத்தின் பின் ஆரம்பமாக வேண்டிய திட்டமேயாகும். கதர் இயக்கம் பட்டண வாசிகளுக்காக ஏற்பட்டதன்று. கிராம வாசிகளின் இரத்தத்தைக் குடித்து பட்டண வாசிகள் வாழ்வதற்காக ஏற்பட்டதன்று. இந்த முறையை மாற்றியமைப்பதே கதர் இயக்கம் ஆரம்பித்ததன் நோக்கமாகும். அதனால் பட்டணவாசிகளின் இரத்தத்தைக் கறக்க வேண்டும் என்ற நோக்கம் ஒருநாளும் கிடையாது. எது இயற்கைக்குப் பொருந்திய முறையோ அதை ஏற்படுத்துவதே நோக்

கம். பிரிட்டிஷார் வருவதற்கு முன்பும் பட்டணங்கள் இருக்கவே செய்தன. அந்தக் காலத்தில் அவற்றின் நிலைமை மோசமாகவே இருந்தது. இப்போது அது இன்னும் அதிக மோசமாகக் காணப்படுகிறது. பட்டணங்கள் நகரங்கள் ஆய்விட்டன. அங்கே இந்தியக் கோடீஸ்வரர்கள் குடியிருந்த போதிலும் அவைகள் பிரிட்டிஷ் எஜமானர்களுக்காகவே வாழ்ந்து வந்தன. இந்தப் பெரிய பிழையை இல்லாமல் செய்வதற்காகவே கதர் இயக்கம் தோற்றுவிக்கப் பட்டது. மில் துணியானது கிராமங்களின் அடிமைத்தனத்தின் சின்னம். கதர் அவற்றின் அரசியல், பொருளாதார சுதந்தரத்தின் சின்னம். அந்த மாதிரியாக இல்லாவிட்டால் அதற்கு அர்த்தமே கிடையாது. ஆதலால் கதர் அபிவிருத்தி விஷயத்தில் எவ்விதமான நல்ல மாறுதல் செய்தாலும் அது வரவேற்கத் தகுந்ததே யாகும்.

இப்பொழுதுள்ள அபிவிர்த்தி நல்லதாகவே தோன்றிய போதிலும் கதர் நூல் நூற்று நெசவு செய்த போதிலும் அதைத் தாங்கள் அணியாத கிராமத்து ஜனங்கள் விஷயத்தில் நல்லதாகத் தோன்றவில்லை. கதர் உபயோகிப்பதால் உண்டாகும் கௌரவத்தையும் நன்மையையும் அவர்கள் அறிந்து கொள்ளவில்லை அவர்கள்தான் அப்படி என்பதன்று, ஊழியர்களுங்கூட அறிந்துகொண் டிருப்பதாகத் தெரியவில்லை. பட்டணவாசிகள் கதர் உடுத்தவும் பிராயச்சித்தம் செய்யவும் வேண்டும். அவர்கள் பணமுடையவர்களாக இருப்பதால் பிராயச் சித்தத்தைப் பணம் கொடுத்து வாங்கிக்கொண்டு அதன் காரணமாக தேசபக்தர்களாகக் கொண்டாடப்படத் தயாரா யிருக்கிறார்கள். ஆனால் அகில இந்திய சர்க்கா சங்கம் கதரின் அஸ்திவாரத் தத்துவத்தைக் காற்றில் பறக்க விட்டுவிட முடியுமா? ஆதலால் அது கிராமவாசிகளை கதர் அணிபவர்களாக ஆக்கத் தன்னுடைய சக்தி முழுவதையும் பயன்படுத்தி வருகின்றது. அது முதலில் நூற்பவர்களையும் கதர் நெய்பவர்களையுமே கதர் உடுத்தும்படி செய்ய முயன்று வருகின்றது. இந்த முயற்சி வெற்றி பெறும் என்பதில் சந்தேகமில்லை. அப்படி வெற்றி பெறும்பொழுது நகரத்திலும் பட்டணத்திலும்போதுமான கதர் விற்கப்படக்கூடிய காலம் வந்துவிடும். அதன்பிறகு இந்தியாவில் கதர்துணி மட்டுந்தான் கிடைக்கும். அந்த லட்சியம் கை கூடுவதற்காக அகில இந்திய சர்க்கா சங்கம் வெகு சிரத்தையுடன் பாடுபட்டு வருகிறது. அதன் ஆராய்ச்சிகள் மூலம் கதர் அந்த மாதிரி ஆக முடியாது என்று தெரிய வருமானால் அது உடனே பகிரங்கமாக ஒப்புக் கொள்ளத் தயங்காது. கதர் என்பது மெஷின்களே பிரதானமாக இருக்கும் இந்தச் சகாப்தத்திலே 40 கோடி மக்களுடைய மனிதத்துவத்தைப் பற்றிய விஞ்ஞானமேயாகும் என்பதை மறந்துவிடலாகாது. அந்தவிதமாகப் பார்த்தால் அது கவர்ச்சியுடையதாக இருப்பினும் மிகக் கஷ்டமான பிரச்னையாகும். தோல்வி உண்டானாலும் தோல்வி தோல்வியாகாது. நம்முடைய கதர் இயக்கமானது சர்க்கா ஜனங்களுடைய அடிமைத்தனத்தின் சின்னமாக இருந்த இருள்சூழ்ந்த காலத்தை மறுபடியும் உண்டாகும்படி செய்வதற்கான முயற்சியன்று. இந்தியா தேசம் தன்னுடைய அடிமைத்தளையை அறுத்தெறிய முயன்று வருகிறது. அதனால் கதர் இயக்கமானது இந்திய ஆன்மாவின் வெற்றியேயாகும். சுதந்திரர்களும் அடிமைகளும் ஒரேவிதமான உணவுதான் உண்ணுகிறார்கள். ஆனால் ஒருவர் சுதந்திர உணவை உண்ணுகிறார். மற்றவர் அடிமை உணவை உண்ணுகிறார்.

ஆனால் நகர வாசிகளும் பட்டணவாசிகளும் சர்க்கா கூறும் நற்செய்தியைக் கற்றுக் கொள்வார்களானால், அவர்கள் தங்கள் ஓய்வு நேரத்தைப் பஞ்சை வெட்டுவதிலும் நூல் நூற்பதிலும் கதர் நெய்வதிலும் உபயோகிப்பார்களேயன்றி குதிரைப் பந்தயச் சூதாட்டத்திலும் குடியிலும் "கிளப்"களில் போய் உட்கார்ந்து காலத்தை வீணாக்குவதிலும் உபயோகிக்க மாட்டார்கள். அவர்களுடைய குழந்தைகளும் தங்கள் பெற்றோர்க்காகவும் இந்தியாவின் சுதந்திரத்துக்காகவும் நூற்கவும் வேண்டும், இந்தியாவுக்கு வேண்டிய கல்வியைப் பெறவும் வேண்டும். நான் ரோமாபுரிக்குச் சென்றிருந்த பொழுது முஸோலினியின் உத்யோகஸ்தர்கள் கடற்படைத் தந்திரங்கள் கற்பிக்கப்பட்டுள்ள சிறுவர்களுடைய பயிற்சி முறைகளைக்காட்டுவதில் பெருமை கொண்டார்கள். இங்கிலீஷ் குழந்தைகள் இங்கிலாந்துக்கு வேண்டியவற்றை எல்லாம் தங்கள் தாய் பாஷையில் கற்காமல் வேறு எந்த பாஷையில் கற்கிறார்கள்? சிறுவர்கள் அன்னிய பாஷையையும் அதன் மூலம் அன்னியனுக்கு வேண்டியதையும் கற்கும்படியான பாக்கியம் இந்தியாவுக்குத்தான் கிடைத்திருக்கிறது.

அகில இந்தியச் சர்க்கா சங்கத்தின் கதர் கடைகள் இனிமேல் முன்னிலும் அதிகமான நல்ல காரியத்துக்கே உபயோகிக்கப்படும். அவைகள் ஜனங்களுக்கு நூல் நூற்றல் நெய்தல் சம்பந்தமான தந்திரங்களையெல்லாம் கற்றுக்கொடுக்கும். அவற்றைக் கற்கஜனங்கள் எல்லோரும் அந்தக் கடைகளுக்குக் கூட்டம் கூட்டமாக வருவார்கள் என்று நம்புகிறேன். அதை அவர்கள் கற்றுக்கொள்வார்களானால் அவர்களுக்கு வேண்டிய கதர் முழுவதும் அவர்களுக்குக் கிடைத்துவிடும். மனம் உண்டானால் வழியுண்டு.

இப்பொழுது மில் துணியைப் போலவே கதருக்கும் பஞ்சம் ஏற்பட்டிருக்கின்றது. அதன் காரணத்தைப் பற்றி ஆராய விரும்பவில்லை.

பாஞ்சகனி, — 14-7-46 — மோ. க. காந்தி.

## வாரக் கடிதம்

பண்டித ஜவஹர்லால் நேரு அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியில் செய்த பிரசங்கத்தில் ஒரு அர்த்த புஷ்டியுள்ள விஷயம் கூறினார். கமிட்டி முன்புள்ள பிரச்னைகளை உலக சம்பவங்களுடன் சேர்த்து ஆராய வேண்டுமே யன்றித் தனியாகப் பிரித்து ஆராயக் கூடாது என்று மிகுந்த உணர்ச்சியுடன் வாதித்தார். "உலகம் தலைகீழாக ஆகிவிட்டது. வெகு காலமாக இருந்து வந்த லட்சியங்கள் தகர்ந்து போய்விட்டன. ஆயினும் இந்தியா மட்டும் தன்னுடைய மூலாதாரமான கொள்கைகளை விட்டு விடாமல் பிடித்துக் கொண்டிருக்கின்றது. அது கூடிய சீக்கிரத்தில் பரிபூரணமான சுதந்திரம் அடைந்ததும் உலக விவகாரங்களில் தனக்குரிய உயர்ந்த ஸ்தானத்தை வகிக்கும். உலகப் பிரச்னைகளைத் தீர்த்துக் கொடுக்கும் விஷயத்தில் இந்தியா என்ன உதவி செய்யப் போகின்றது? அப்பொழுது அது தனக்கு வழி காட்டியாகக் கொள்ளப் போகிற தத்துவங்கள் யாவை?

அதுதான் நீங்கள் உங்கள் கொள்கையை நிர்ணயித்துக் கொள்வதில் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டிய விஷயமாகும். நம்முடைய தேசம் பெரிய தேசம். அது எந்தப் பக்கம் சாய்கின்றதோ அந்தப்படியேதான் உலகத்தின் போக்கும் நடைபெறும்" என்று கூறினார்.

## தென் ஆப்பிரிக்காப் போராட்டம்

காந்தியடிகள் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திலிருந்து திரும்பி வந்தபின் புனாவில் முதன் முதலாகச் செய்த பிரசங்கமானது பண்டித ஜவஹர்லால் நேருவின் பிரசங்கத்தின் வியாக்கியானம் போலத் தோன்றியது. அவர் பேச எடுத்துக்

கொண்ட விஷயம் உலக விவகாரங்களில் தென் ஆப்பிரிக்காப் போராட்டத்தின் ஸ்தானத்தைப்பற்றியதேயாகும். அதுவே எல்லாவற்றிலும் முக்கியமான பிரச்னையாக ஆகிக்கொண்டிருக்கின்றது. நீக்கிரோவர்கள் நிராயுதபாணிகளாகவும் உதவியற்றவர்களாகவும் வெள்ளையர்களுடைய அக்கிரமக் கொடுங்கோல் ஆட்சியின்கீழ் அல்லற்படுபவர்களாகவும் இருந்தபோதிலும் இந்தப் போராட்டத்தால் தங்களுக்கும் விடுதலை கிடைக்கும் என்று எண்ண ஆரம்பித்திருக்கிறார்கள். இந்தியச் சாத்வீக எதிர்ப்பினர்களுடன் சேர்ந்து கொள்ளத் தீர்மானித்திருக்கிறார்கள். இவ்விதமாகத் தென் ஆப்பிரிக்காப் போராட்டமானது உலகத்திலுள்ள அடிமை ஜனங்களுடைய விடுதலை சம்பந்தமாக சுதந்திர இந்தியா செய்ய வேண்டிய சேவையை நன்கு புலப்படுத்துகின்றது. அதன் பூரணமான அர்த்தத்தை அறிந்து கொள்ளவேண்டுமானால் அது சம்பந்தமான சரித்திரத்தையும் அறிந்துகொள்வது அவசியமாகும்.

இந்தியாவிலிருந்து போனவர்கள் ஆதியில் 1840–ம் வருஷத்தில் முறிச்சீட்டு எழுதிக்கொடுத்தே சென்றார்கள். அந்தக் காலத்தில் நீக்கிரோவர்கள் வெள்ளையர்க்கு வேலைசெய்ய மறுத்துவிட்டார்கள். அதனால் வெள்ளையர்கள் இந்தியர்களை முறிச்சீட்டு முறையில் தருவித்துக் கொண்டார்கள். இந்த முறையும் ஒரு மாதிரியான அடிமைமுறையே யாகும். அந்த மாதிரியாக அடிமையாகியவன் ஐந்து வருஷகாலத்துக்கு அடிமை யாவான். அவ்வளவுதான் வித்தியாசம். இப்படித்தொழிலாளர்கள் சென்றபின் 1882-ல் வியாபாரிகள் சென்றார்கள். அவர்களுள் ஹாஜி சாகேப் அபுபக்கர் அகமது ஜவாரியே முதன் முதலாகச் சென்றவர் ஆவார். இந்த வியாபாரிகள் தென் ஆப்பிரிக்காவை அபிவிர்த்தி செய்து கொஞ்சம் பணம் சம்பாதித்தார்கள். அவர்களுடைய குழந்தைகள் டாக்டர்களும் வக்கீல்களும் ஆனார்கள்.

இதைக் குறித்து காந்தியடிகள் கூறியதாவது :—

“தென் ஆப்பிரிக்காவில் போராட்டம் நடத்துகிறவர்கள் இவர்கள்தாம். அவர்கள் போராட்டத்தைத் தங்கள் நலனை உத்தேசித்து நடத்துவதைவிட அதிகமாக இந்தியாவின் கௌரவத்தை உத்தேசித்தே நடத்துகிறார்கள். அங்கே நடக்கிறது என்ன என்பதை அறிவேன். ஏனெனில் ஒருவிதத்தில் நானும் தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்தவனே. அங்கேயே நான் 20 வருஷகாலம் என்னுடைய வாழ்நாளில் சிறந்த பாகத்தை கழித்திருக்கின்றேன். அங்கே தான் சத்தியாக்ரகம் என்னும் கொள்கை ஆரம்பமானதாகும். மேல் நாட்டார் இன்று பிராயச்சித்தம் செயயவேண்டிய நிலைமையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். தோற்றவர்கள் வென்றவர்களுடைய பாதங்களினடியில் கிடக்கிறார்கள். ஆயினும் வென்றவர்கள் தோற்றவர்களைவிட எந்தவிதத்திலும் உயர்ந்தவர்களாக ஆகிவிடவில்லை என்பதைக் கண்டுகொண்டு வருகிறார்கள். ஆயினும் மேநாட்டாருடைய நாகரிகத்தின் சவக்குழி இந்த யுத்தமன்று. அதற்குத் தென் ஆப்பிரிக்காவில தோண்டப்பட்டு வருகிறது. வெள்ளை நாகரிகம் கறுப்பு நிறமாகவும், ஆசிய நாகரிகமும், நீக்கிரோ நாகரிகமும், வெள்ளை நிறமாகவும் தோன்றுகிறது. நம்முடைய மக்கள் உறுதியாக அஹிம்சா மார்க்கத்தில் நிற்பார்களானால் அவர்களுடைய போராட்டமானது தென் ஆப்பிரிக்காவில் சாயம் கறுத்து வருகிற வெள்ளை நாகரிகத்தின் சவப்பெட்டியின் கடைசி ஆணியை அடித்து இறக்கிவிடும் என்பதில் எனக்கு எள்ளளவு சந்தேகமும் கிடையாது.

வெள்ளையர்கள் மிருகங்கள் ஆகிவருகிறார்கள். அங்கே மேனாட்டு நாகரிகமும் கீழ்நாட்டு நாகரிகமும் போராடுகின்றன. அங்கே அரசாங்கத் தலைவராகவுள்ள ஜெனரல் ஸ்மட்ஸ் ஒரு தத்துவ சாஸ்திரி. அவர் என்னைத் தம்முடைய நண்பராகக் கூறுகின்றார். அவர் ஆசியாவின் பண்பாட்டைக் குறித்து எவ்வித ஆட்சேபமும் கூறுவதற்கில்லை. ஆயினும், அவர் வெள்ளை நாகரிகத்தைப் பாதுகாக்கும் பொருட்டு இந்தச் சட்டத்தைச் செய்திருக்கிறார். அறிவுள்ள நான் அதைச் சரி என்று ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார்.

ஆனால் நாகரீகம் என்றால் அதற்குச் சட்ட ரீதியான பாதுகாவல் எதற்காக என்பது எனக்கு விளங்கவில்லை. இந்தியர்கள் அஹிம்சா முறையாகிய நாகரிக முறையிலேயே அந்தச் சட்டத்தை எதிர்த்துப் போராடுகிறார்கள். சட்டத்தை மீறுவதற்காகக் கொடுக்கப்படும் தண்டனையைச் சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறார்கள்.

அங்குள்ள வெள்ளைப் போக்கிரிகளும் சட்டத்தை மீறுகிறார்கள். அவர்கள் மீறுவது அக்கிரமமாகச் செய்யப்படுவதால் தண்டனைக்குரிய குற்றமாகும். இந்தியாவிலிருந்து போனவர்களின் சந்ததியான இந்திய மக்களில் பெரும்பாலோர் ஹரிஜனங்கள். அவர்கள் இப்படி தைரியமாகச் சத்தியாக்கிரகம் செய்வது இந்திய மக்கள் பெருமை கொள்ளக்கூடிய விஷயமாகும். நன்றாக ஆராய்ந்து பார்த்தால் சாத்வீக எதிர்ப்பு என்னும் ஆயுதம் ஆசியாவிலேயே பிறந்ததாகும். இயேசு ஆசியக்காரர். அவர் மறுபடியும் பிறந்து இன்று தென் ஆப்பிரிக்காவுக்குப் போய் வாழ்வாரானால் அவர் “கெட்டோ”வில் தனியாக வாழ வேண்டியவராகவே இருப்பார்.

ஜெனரல் ஸ்மட்ஸ் 1914-ல் உணர்ந்து கொண்டது போலவே இப்பொழுதும் தம்முடைய பிழையை உணர்ந்து கௌரவமான ஒரு உடன்படிக்கை செய்து கொள்வார் என்று நம்புகின்றேன். இந்தியச் சத்தியாக்ரகிகளுக்கு அனுதாபம் தெரிவிக்கவும் உதவி செய்யவும் வெள்ளையர்கள் ஒரு கமிட்டி ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இதன் காரணமாக போக்கிரித்தனம் நின்று அநீதியான சட்டம் ரத்து செய்யப் படுமானால் மேனாட்டு நாகரீகமும் கீழ் நாட்டு நாகரீகமும் கலந்து வாழ இடமுண்டு. அப்படியில்லையானால் தென் ஆப்பிரிக்காவே மேனாட்டு நாகரீகத்தின் சவக் குழி ஆய்விடும்.

தங்கமயமான இலங்கை

காந்தியடிகள் புனாவில் நடத்திய கடைசிப் பிரார்த்தனைக் கூட்டத்தில் இலங்கையிலுள்ள இந்தியர்களுடைய நிலைமையைப் பற்றிக் கூறியதாவது :—

“நான் சில வருஷங்கட்கு முன் இலங்கை சென்றிருந்தேன். பனி மூடிய ஹிமாலய மலையிலுள்ள காஷ்மீர் இந்திய மாதாவின் கிரீடம். இலங்கை அவளுடைய கழுத்திலுள்ள முத்தாரத்தின் பதக்கமாகும். தங்க மயமான இலங்கை என்று கூறுவது மிகவும் பொருத்தமானதே. இந்தியாவை அபிவிர்த்தி செய்தவர்களில் முக்கியமானவர்கள் இந்தியர்களே. இப்போது இலங்கை மகாஜனங்கள் ஒருவிதமான அரசியல் அடைந்துவிட்டதில் வியப்பொன்றுமில்லை. அந்த அரசியல் கிடைத்துவிட்டதன் காரணமாக அவர்கள் இந்தியர்களை இலங்கையைவிட்டு வெளியேற்ற விரும்புகிறார்கள். இந்தியர்கள் தென் ஆப்பிரிக்காவுக்குச் சென்றதுபோலவே இலங்கைக்கும் தொழிலாளர்களாகவே சென்றார்கள். சுகாதாரமற்ற நிலைமையிலும் கஷ்டமான நிலைமையிலுமே வேலை செய்யவேண்டியவர்களாக இருந்தார்கள். அவர்கள் அங்கேயே குடியேறிவிட்டார்கள். இந்த நிலைமையில் அவர்களை இப்பொழுது அந்த நாட்டை விட்டுப் போகும்படி சொல்வது அவர்களுக்குக் கஷ்டம் தருவதாகும். அவர்கள் இலங்கை வாசி

களுக்குள்ள பிரஜா உரிமைகளைத் தங்களுக்கும் அளிக்கும்படி கேட்கிறார்கள். அதற்கு இலங்கை வாசிகள் அவர்கள் இரண்டு விதமான உரிமைகளைப் பெற முடியாது என்று கூறுகிறார்கள். இந்தியர்கள் என்றால் இந்தியாவுக்குச் செல்லட்டும், இந்தியர்கள் இல்லை என்றால் இலங்கை வாசிகள் ஆகட்டும் என்று சொல்லுகிறார்கள். எந்த விதத்திலும் இந்தியர்கள் இலங்கையில் இருக்கக்கூடாது என்று சொல்பவர்களும் உளர். இப்படிக் கூறுவது விநோதமாகயிருக்கிறது. இந்தியர்களும் இலங்கையரும் சகோதரர்கள் ஆவார்கள். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் உள்ளது ஒரு சிறு கடலேயாகும். அதைப் பலவான் யாரும் நீந்திவிடமுடியும். அவர்கள் இருவரும் கறுப்பு ஜாதியார்தாம். இலங்கையர்கள் புத்தமதத்தைத் தழுபவர்கள். புத்தமதம் பிறந்தது இந்தியாவிலேயே யாகும். அப்படியிருக்க இந்தியரும் இலங்கையரும் சண்டை போடலாமா? அவர்கள் இருவரும் சண்டை போடுவதை விட்டு சமாதானமாகப் போக வேண்டும் என்றே எல்லோரும் விரும்புகிறார்கள். அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியார் இது விஷயத்தை ஆராய்வதற்காக காங்கிரஸ் தலைவர், திரு. ராஜகோபாலாச்சாரி, திரு. ராமச்சந்திரன், திரு. அரியநாயகம் ஆகிய நான்கு பேரையும் ஒரு கமிட்டியாக நியமித்திருக்கிறார்கள். இலங்கையிலுள்ள இந்தியத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். காங்கிரஸ் சபையார் அதை நிறுத்திக் கொள்ளும்படி யோசனை கூறினார்கள். அவர்கள் இலங்கையர்க்குச் சங்கடம் உண்டாக்க விரும்பவில்லை. சகோதர்கள் மாதிரி சமாதானம் செய்து கொள்ள விரும்புகிறார்கள்.

இது விஷயத்தில் நீங்கள் செய்ய வேண்டியது யாது? இருதிறத்தாருக்கும் வழி காட்டும்படியாகக் கடவுளைப் பிரார்த்தியுங்கள். அயல் நாட்டிலுள்ள நம்முடைய சகோதரர்களுடைய நிலைமையை அறிந்து கொள்ள வேண்டியது நம்முடைய கடமையாகும். அதனால்தான் இலங்கையிலுள்ள இந்தியர்களைப்பற்றி இவ்வளவு தூரம் உங்களுக்குச் சொன்னேன்.''

## வறுமையின் பெருமை

காந்தியடிகள் பாஞ்சகனியில் நடத்திய இரண்டாவது பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசியதாவது :—

''இப்பொழுது பாடப்பெற்ற பாடல் கடவுளே ஏழையின் நண்பர் என்று கூறுகின்றது. பழைய காலத்தில் வறுமையானது நம்முடைய நாட்டில் பெருமை யடைந்துவந்தது. ஏழைகள் தங்கள் வறுமையைக் குறித்து நாணியதில்லை. பணக்காரருடைய அரண்மனையைவிடத் தம்முடைய குடிசையையே பெரிதாக மதித்தார்கள். அவர்கள் பணவிஷயத்தில் தரித்திரமா யிருந்தபோதிலும் ஆன்ம விஷயத்தில் தரித்திரர்களாக இருக்கவில்லை. திருப்தியே அவர்களுடைய பொக்கிஷமாக இருந்தது.

எல்லோரும் பணக்காரராகி மாளிகைகளில் வசிக்க முடியாதிருப்பதால் பணக்காரர்களுடைய மாளிகைகளை இடித்துத்தள்ளி எல்லோரையும் ஒரே மாதிரியாக வாழச் செய்துவிடுவோம் என்று ஏழைகள் கூறலாம். ஆனால் அதனால் சந்தோஷமோ சமாதானமோ தங்களுக்கும் உண்டாகாது, யாருக்கும் உண்டாகாது. கடவுளும் இந்தவிதமான ஏழைகளின் நண்பராகவும் துணைவராகவும் இருக்கமாட்டார். பண வித்தியாசம் என்ற பொருளில் வறுமையானது உலக முழுவதிலும் காணப்படுகின்றது. மனிதர்கள் எல்லோரும் திறமையிலும் தேவையிலும் சமமாக இல்லாததால் இந்த வித்தியாசம் இருக்கத்தான் செய்யும். பணத்தைக் கடவுளாக வணங்கும் குபேர நாடாகிய அமெரிக்காவில்கூட அநேகர் ஏழைமக்களாக இருக்கிறார்கள். ஷா ஆலம் என்னும் பாதுஷாவின் உறவினர் சிலர் ரங்கூனில் பிச்சை எடுப்பதைக் கண்டு மலபாரி என்னும் கவிஞர் தம்முடைய இதயத்தைக் கவர்ந்துவிட்ட அந்த விஷயத்தைக் குறித்து அழகான பாடல் ஒன்று பாடியுள்ளார். அதன் சாரம் யாதெனில், கடவுளையே தம் நண்பராகவும், துணைவராகவும் கொண்டவரே தனவந்தர் என்பதேயாகும். தேவையை எவ்வளவு குறைத்துக்கொள்ள முடியுமோ அவ்வளவு குறைத்துக்கொள்வதில் சந்தோஷம் காணும் ஒரு இனத்தார் இந்தியாவில் இருந்தார்கள், அத்தகையோர் தங்கள் முன்தானையில் கொஞ்சம் மாவும், உப்பும், மிளகாயும் முடிந்து வைத்துக்கொண் டிருப்பார்கள். ஒரு லோட்டாவும் தண்ணீர் இறைக்க ஒரு கயறும் வைத்திருப்பார்கள். அவருக்கு வேறு எதுவும் தேவையில்லை. தினந்தோறும் கால்நடையாகப் பத்துப் பன்னிரண்டு மைல் தூரம் நடப்பார். மாவைத் துணியிலேயே பிசைந்து யெடுத்துக்கொண்டு. சுள்ளிகளைச் சேர்த்து நெருப்பு உண்டாக்கி அதில் ரொட்டியைச் சுடுவார். அந்த ரொட்டியை ருசி பார்த்திருக்கிறேன். வெகு ருசியாக இருந்தது. ருசிக்குக் காரணம் ரொட்டியன்று, நல்ல வேலை செய்து களைப்புற்றதும் மனத்தில் திருப்தி உண்டானதுமேயாகும். அத்தகையோர்க்கு நண்பரும் தோழரும் கடவுளேயாவர். அவர் சக்கரவர்த்திகளைவிட அதிகம் பணமுடையவராகத் தம்மைக்கருதிக்கொள்வார். பிறர் பணத்தை விரும்புகிறவர்களுக்குக் கடவுள் நண்பராக இருக்கமாட்டார். எல்லோரும் இந்த மாதிரி நடந்து இணையற்ற இன்பம் அனுபவிக்கவும் அதைப் பிறர்க்கு அளிக்கவும் செய்யலாம். ஆனால் பணத்தின் மேல் ஆசை வைத்தால் பிறரைக் கெடுத்துத் தான் அந்த ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ள முடியும். அப்படிச் செய்தாலுங் கூட எல்லா ஜனங்களும் கோடீஸ்வரர்கள் ஆகிவிட முடியாது. உண்மையான இன்பம் திருப்தியாலும் கடவுளை நண்பராகக் கொள்வதாலுமே கிடைக்கும்

பாஞ்சகனி, — 15-7-46 — பியாரேலால்.

## கதர்த் திட்டம்

காந்தியடிகள் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திலிருந்து திரும்பி வந்து பூனாவில் தங்கிய பொழுது அகில இந்திய சர்க்கா சங்கத்தின்வேலையையும் கஸ்தூரிபா நிதி வேலையையும் கவனித்தார்.

25 வருஷகாலமாகக் கதர் வேலை நடந்து வருவதால் யுத்தத்தால் பீடிக்கப்பட்ட நாடுகள் துணிப் பஞ்சத்தைச் சமாளிக்க முடியாமல் திண்டாடுவது போல நமது தேசம் திண்டாட வேண்டியதில்லை. இந்தியாவானது தன்னுடைய திறமையைச் சரியானபடி உபயோகித்தால் அது தனக்கும் துணி நெய்து கொள்ளலாம், பக்கத்திலுள்ள நாடுகளுக்கும் துணி கொடுக்கலாம்.

காந்தியடிகள் 10ம்தேதி மாலை நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் அகில இந்திய சர்க்கா சங்கத்தின் நிர்வாகக் கமிட்டியார் அன்று பிற்பகல் விவாதித்த தம்முடைய திட்டத்தைப் பற்றி விவரமாகக் கூறினார் :—

''அகில பாரத சர்க்கா சங்கம் ஏழை நூற்போருக்கும் நெய்வோருக்கும் ஏழு கோடி ரூபாய் கொடுத்திருக்கிறது. அது பெரிய காரியம்தான். ஆயினும் அது செய்யவேண்டிய வேலையோடு ஒப்பிட்டால் அது வெகு அற்பமானதேயாகும். முன்காலத்தில் ஜனங்கள் எல்லோரும் கதரையே அணிந்திருந்தார்கள். அதுபோல் இன்றும் இந்தியமக்கள் அனைவரையும் கதர் அணியுமாறு செய்யவேண்டியதே நோக்கம். அந்தக் காலத்தில் நம்முடைய நாட்டுக்கு வேண்டிய துணி செய்யப்பட்டதோடு வெளிநாடு

களுக்கு ஏற்றுமதியும் செய்யப்பட்டது. அந்தக் காலத்தில் மில்கள் கிடையா. ஒவ்வொரு வீட்டிலும் சர்க்காவும் தக்ளியும் இருந்தபடியால் ஒவ்வொரு வீட்டையும் ஒரு மில் என்றே கூறலாம். இப்பொழுதுள்ள மில்களும் சர்க்காவிலிருந்து உண்டானவைகளே. மனிதனிடம் தெய்வீக சக்தியும் சாத்தான் சக்தியும் சேர்ந்தே காணப்படுகின்றன. கைராட்டினம் பிறரைக் கெடுத்து வாழாததால் அது தெய்வீக சக்தியுடையதாகும். அன்னிய நாட்டார் கைராட்டினத்தைக் கொண்டு செய்யக்கூடிய அபாரமான வேலைகளை உணர்ந்து நீராவியின் உதவியால் மில்களை சிருஷ்டித்துக் கொண்டு அவைகளை உலகத்திலுள்ள ஏழை மக்களைச் சுரண்டும் கருவிகளாக உபயோகித்து வருகிறார்கள். இது சாத்தான் சக்தியின் அடையாளமாகும். இந்தியாவில் எத்தனையோ மில்கள் இருந்தும் ஏராளமான ஜனங்கள் அநேகமாக அம்மணமாகவே இருந்து வருகிறார்கள். உலக முழுவதிலும் துணிப் பஞ்சம் உண்டாகி யிருக்கின்றது. இந்தோனேஷியாவின் பிரதம மந்திரி சுல்தான் ஷாரார் இந்தியாவில் ஏற்பட்டுள்ள பஞ்சத்தைத் தீர்ப்பதற்காக தம்முடைய நாட்டில் உபரியாக இருக்கும் அரிசியைச் சந்தோஷமாக இந்தியாவுக்கு அனுப்புவதாக பண்டிதநேருவுக்கு அறிவித்திருக்கிறார். அரிசிக்குப் பதிலாக அவர்கள் பணம் கேட்கவில்லை. அங்கே துணி உண்டாக்க முடியாதிருப்பதால் அவர்களுக்குத் துணிதான் வேண்டுமாம். அங்கே துணி செய்யும் மில்களுமில்லை, அவர்கள் கைராட்டினத்தை உபயோகிக்கவுமில்லை. பண்டிதநேரு இது விஷயத்தைச் சில மில் முதலாளிகளிடம் சொன்னார். அவர்கள் ஜாவாவுக்கு அனுப்புவதற்காக அதிகமான அளவு துணியைச் சந்தோஷமாகத தந்திருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள நாற்பது கோடி மக்களில் 20 கோடிப் பேராவது தினசரி அரைமணி நேரம் நூற்க ஆரம்பிப்பார்களானால் அவர்கள் கிராம வாசிகளுக்கு மட்டுமன்று, நகர வாசிகளுக்குங் கூட போதுமான துணியைச் செய்து கொடுக்க முடியும். இந்தியாவுக்கு வரு முன்னதாகவே எனக்கு இந்த விஷயம் புலனாயிற்று. அதுதான் கிராமக் கைத் தொழில்களின் நடு நாயகமான சூரியன், அது ஏழை பணக்காரன் என்னும் வித்தியாசத்தை ஒழித்துவிடும். இப்பொழுதுள்ள துணிப் பஞ்சத்தை நீக்கவேண்டுமானால் கிராம வாசிகள் தங்கட்கு வேண்டிய துணியைத் தாங்களேதான் செய்து கொள்ள வேண்டும் என்று மந்திரிகள் கூறிவிட வேண்டும். அகில பாரத சர்க்கா சங்கத்தார் இதற்கான திட்டம் ஒன்றை வகுத்து மந்திரிகளிடம் சமர்ப்பிக்க வேண்டும். பட்டண வாசிகள் நூல் கொடுத்துக் கதர் வாங்க வேண்டி யிருக்கிறதே என்று வருத்தப் படுகிறார்கள். அவர்கள் கதரின் புதிய தத்துவத்தை அறிந்து கொண்டால் இப்படி வருத்தப்பட மாட்டார்கள். அவர்களும் கிராமவாசிகள் மாதிரியே தங்களுக்கு வேண்டிய கதரை உற்பத்தி செய்துகொள்வதை யாரும் தடுக்கவில்லை. ”

பாஞ்சகனி, 15—7—46. பியாரேலால்

### கஸ்தூரிபா நிதி

காந்தியடிகள் அதே பிரசங்கத்தில் கஸ்தூரிபா நிதியைப் பற்றிக் குறிப்பிட்டுக் கூறியது :—

“ இந்த நிதியின் வேலை அகில பாரத சர்க்கா சங்கத்தின் வேலையைவிடக் கஷ்டமானதாகும். ஒன்றேகால் கோடி ரூ. வசூலிக்கப்பட்டிருப்பது உண்மைதான். ஆனால் அந்தப் பணத்தைக் கிராமங்களிலுள்ள பெண்களுடைய க்ஷேமத்துக்காகவும் குழந்தைகளுடைய க்ஷேமத்துக்காகவுமே செலவு செய்ய வேண்டியதாயிருக்கிறது. கிராமங்களில் செய்ய வேண்டிய மருத்துவச்சி வேலையைக் கவனியுங்கள். அங்குள்ள மருத்துவச்சிகளுக்கு அறிவுமில்லை, அசுத்தமாகவுமிருக்கிறார்கள். கிராமத்துப்பெண்கள் பட்டணத்துப் பெண்களைவிட அதிக பலமுடையவர்களாக இருக்கிறார்கள். ஆனாலும் இயற்கையின் விதிகளை மீறி நடந்துவிடமுடியாது கிராமத்து மருத்துவச்சிக்கு சுத்தமாயிருக்கவேண்டிய முறைகளைக் கற்பிப்பது என்பது எளிதான காரியமன்று. முதியவர்க்குக் கல்வி கொடுத்தால்தான் இது சாத்தியமாகும். முதியவர் கல்வியோ குழந்தைகள் கல்வியை விட அதிகக் கஷ்டமான காரியம். வசூலிக்கப் பட்டிருக்கும் ஒன்றேகால் கோடி ரூபாயையும் சுலபமாகச் செலவு செய்ய வேண்டுமானால் பட்டணங்களிலுள்ள ஆஸ்பத்திரிகள் மாதிரி இரண்டொரு பெரிய ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்தி விட்டால் போதும், ஆனால் அப்படிச் செய்வது கிராமங்களிலுள்ள பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் உண்மையான சேவை செய்ததாகாது. வேலை விரைவாக நடக்கவில்லை என்று ஜனங்கள் நினைப்பதை நான் அறிவேன். ஆனால் அவர்கள் கொஞ்சம் பொறுமையாகவே இருக்க வேண்டும். வேலை மெதுவாக நடந்த போதிலும் நல்லவிதமாகவே நடந்து வருகிறது. நாம் இதுவரை சென்றறியாத கடலிலேயே கப்பலை ஓட்டிக் கொண்டிருக்கிறோம். அதனால் எதையும் வெகு ஜாக்கிரதையாகவே செய்யவேண்டி யிருக்கிறது ”

### பாஞ்சகனிவாசம்

காந்தியடிகள் இப்பொழுது பாஞ்சகனிக்கு வந்திருக்கிறார். சென்ற வருஷம் வந்திருந்தபொழுது திட்டம் போடப்பட்ட சத்திரத்திலேயே தங்கப் பிரியப்பட்டார். ஆனால் சத்திரத்துக்காக ஒரு கட்டடம் வாங்கியாய்விட்ட போதிலும் அது பழுதுபார்க்கப்பட வேண்டியிருப்பதால் அடுத்த வருஷம்வரை அதில் தங்கமுடியாது. சென்ற மூன்று மாதமாக இடைவிடாமல் வேலை செய்தபின் இப்பொழுது உயிரளிக்கும் சப்தமின்மையையும் ஓஜோன் என்னும் உன்னதமான காற்றையும் நுகர்வதற்காக வந்திருக்கிறார். பிரார்த்தனைக் கூட்டங்கள் முன்போலவே பெண்கள் பாடசாலையில் நடைபெறுகின்றன. பார்ஸிச் சிறுமிகள் பாடிய பாடல்கள் அவரைப் பரவசமாக்குகின்றன.

அவர் முதல்நாள் கூட்டத்தில் கூறியது :—

“இப்போது பாடிய பாடல் உலகத்தைத் துக்கம் நிறைந்த இடமாகவே வர்ணிக்கின்றது. கடவுள்தான் துக்கத்தைத் தாங்கும் பலத்தை அருள்கிறார். கவிஞர் உலகத்தை மாயை என்று கூறுகிறார். நம்முடைய சுகங்கள் மாயையாக இருக்கலாம். ஆனால் நம்முடைய சகோதரர்களுடைய துக்கங்களை மாயை என்று அலட்சியம் செய்துவிட முடியாது. கனவுகள்கூட அவைகள் உள்ளவரை உண்மையாகவே இருக்கின்றன. துன்பப்படுபவர்க்கு துன்பம் உண்மையானதேயாகும். உலகம் உண்மையாயினும் மாயையாயினும் நாம் உலகத்திலுள்ளவரை செய்ய வேண்டிய கடமைகளை உணர்ந்து செய்யவேண்டியதேயாகும்.”

பாஞ்சகனி, — 15-7-46 — பியாரேலால்


## படிக்கவேண்டிய புஸ்தகம்

நமது நாட்டின் எதிர்கால வாழ்வை நிர்ணயிக்கவேண்டிய காலமாக இருப்பதால் நமது தனிப் பெருந் தலைவர் காந்தியடிகளின் அரசியல் தத்துவங்களை அறிந்து கொள்ளுவது ஒவ்வொரு தமிழ் மகனுடைய கடமையாகும். அதற்காக திரு. அகர்வால் எழுதி நாமக்கல் கவிஞர் மொழி பெயர்த்துள்ள ,

**காந்தீய அரசியல்**

என்னும் புஸ்தகத்தை வெளியிட்டிருக்கிறோம்.

தமிழ்ப் பண்ணை, தியாகராயநகர் சென்னை- 17.


அச்சடித்தவர்: பி. அருணசலம், கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரத் தெரு, ஜி.டி., சென்னை
பிரசுரித்தவர்: ஸ்ரீராமன், தமிழ்ப்பண்ணை, தியாகராயநகர், சென்னை. நிர்வாக ஆசிரியர்: சின்ன அண்ணாமலை.